1. உலகச் சந்தையில் இத்தயாரிப்பை ஏற்றுக் கொள்ளக் கூடிய அளவிற்குத் தேவையான தொழில் நுணுக்கம்.

2. உலகச் சந்தையில் இடம் பெறக் கூடிய தகுதி.

3. தொழிற்சாலைகளுக்கு அருகிலேயே குறிப்பிட்ட இடத்திற்குள், உயர்தர மல்லிகைப்பூ கிடைத்தல்.

4. தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரங்கள் கிடைத்தல்.

5. உற்பத்தி வரையறை.

மேலே கூறப்பட்டவைகளை ஆராய்ந்த பின்னர்தான் தொழிற்சாலை ஆரம்பிக்கலாமா என்பது பற்றி முடிவு எடுக்க முடியும்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிகைப்பூவிலிருந்து தயாரிக்கக்கூடிய ஜாஸ்மைன் எண்ணெய் சிறிய பூவிலிருந்து தயாரிக்கப்படுகிறதா அல்லது குண்டு மல்லி என்று சொல்லுவார்களே, அதிலிருந்து எடுக்கப்படுகிறதா ? அந்தப் பூக்களை வயல்களிலிருந்து அரை மணி நேரத்திற்குள் பேக்டரிக்குக் கொண்டுவந்தால்தான் எண்ணெய் எடுக்க முடியும் என்று சொல்கிறார்களே அது உண்மையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தமிழகத்திலே 3 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பிலே மல்லிகைப் பூச்செடிகள் பயிரிடப்பட்டு வருகின்றன. இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலேயும் இல்லாத அளவுக்கு நம் மாநிலத்திலேதான் அதிகமாக உற்பத்தி செய்யப்படுகிறது. உயர்தர மல்லிகைப் பூக்களிலிருந்துதான் சாறு தயாரிக்கும் முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல் பறிக்கப்பட்ட பூக்களின் புதுத் தன்மைகள் கெடாமல் இருக்கின்ற வசதிகளை இங்கே பெற்றதற்குப் பிறகுதான் அத்தகைய தொழிற்சாலையை நாம் உருவாக்க முடியும்.

*Research into 'Sorghum' Maize.*

*Q. 492—THIRU N. KITTAPPA : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether any research into 'Sorghum'-Maize is being conducted in this State by the (1) Agriculture Directorate and (2) Agricultural University and

(b) if so, the details thereof.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) வேளாண்மைத் துறையாலும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தாலும் சோளத்தைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

(இ) (i) வேளாண்மைத்துறை—

கோயில்பட்டியிலுள்ள பருத்தி மற்றும் சிறுதானிய பரிசோதனை பண்ணையிலிருந்து சமீப ஆண்டுகளில் கோயில்பட்டி 5, கோயில்பட்டி 6, கோயில்பட்டி 7 மற்றும் உயர்ந்த ரகம் ஆகிய ரகங்கள் வெளியிடப்பட்டன.

தவிர, மக்கட்டை தலைவிரிச்சான் சோள சம்மந்தமான ஆராய்ச்சிகள் எடுத்துக்கொள்வதற்கு ஒரு புதிய திட்டம் செயல்பட்டு வருகிறது.

(ii) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்.

சமீப காலத்தில் கோ. 21, கோ. 22, கோ. 23 மற்றும் கோ. 24 ஆகிய சோள ரகங்கள் வேளாண்மைப் பல்கலைக் கழகத்தினால் வெளியிடப்பட்டுள்ளன. 1981 ஆம் ஆண்டு கோ. எச். 3 என்ற வீரிய ரகத்தை வெளியிடவிருக்கிறது.

கால்நடை கல்லூரியில் படிக்கும் மாணவர்களுக்கு உதவித்தொகை.

*வினா எண் 504—திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் மற்றும் திரு. ஏ. சி. சண்முகம் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கால் நடைக் கல்லூரியில் (M. V. Sc.) படிக்கும் கால்நடை டாக்டர்களுக்கு அரசு உதவித் தொகை அளிக்கும் உத்தேசம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : ஆம்.